**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.7** |
| **Name** | **:** | **திரு.ரமேஷ்** |
| **Father's Name** | **:** | **ஜெகந்நாதன்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28-6-2023.**

**முதல் விசாரணை -**

**நான் வயலாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இறந்துபோன சுரேஷ் என்னுடைய தம்பி. ஆஜர் எதிரிகளை தெரியும். என் தம்பி இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். 20.1.2017 அன்று இரவு 1 மணி அளவில் என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.**

**நாகப்பன், குமரவேல், இளையவேல், தனசேகர், ஞானவேல், நீலா, தீபா, அமுலரசி ஆகியோர் வீட்டு அருகில் வந்து சண்டை போடுவதாக என் அம்மா ஒரு 8 மணி அளவில் போன் செய்து சொன்னார்கள். நான்**

காவல்நிலையம் போக சொன்னேன். அதற்கு என் அம்மா எதிர் தரப்பினர் சுரேஷ் அண்டா திருடியதாக வழக்கு கொடுத்திருப்பதாக சொன்னார். அதற்கு திருடவில்லை என்று சொல்வதற்காகவது காவல்நிலையம் போக சொன்னேன். பிறகு என் அம்மா உதவி ஆய்வாளர் அழைத்ததால் சுரேஷ் சென்றுவிட்டதாக என்னிடம் சொன்னார்.

இரவு 10.30, 11 மணி அளவில் என்னுடைய மாமா வடிவேல் எனக்கு போன் செய்து நாகப்பன், ஞானவேல், தனசேகர், இளையவேல், குமரவேல் ஆகியோர் சுரேஷை வெட்டிவிட்டார்கள் என்று போன் மூலம் தகவல் கொடுத்தார்கள். நானும் என் மனைவியும் காஞ்சிபுரத்தில் இருந்து கிளம்பி வந்தோம். எதிரே ஆம்புலன்ஸ் வந்ததால் ஆம்புலன்ஸ் பின்னாலேயே காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனையில் என் தம்பி இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

காவல் ஆய்வாளர் எதிரிகளை தேடிச் சென்றார்கள். எதிரி நாகப்பனை வீட்டில் இருந்து அழைத்து கொண்டு காவல்நிலையம் சென்றார்கள். என் தம்பியை நான் மருத்துவமனையில் பார்த்தேன். நான் பார்க்கும்போது வலது பக்க பின் தலையில் வெட்டுக்காயம் இருந்தது. நடு கழுத்தில் கை விரல்களால் பிடித்ததற்கான அடையாளம் இருந்தது.

இறந்துபோன சுரேசிற்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்றால் பொது இடத்தில் நாகப்பன் வீடு கட்ட ஆக்ரமிப்பு செய்தார். அதை சுரேஷ் பொது இடம் என்று ஆட்சேபனை தெரிவித்தார். அதற்கு ஊர் பொது மக்களும் ஆட்சேபனை தெரிவித்து அது சம்பந்தமாக 60 பேர் கையொப்பம் போட்ட ஆட்சேபனை புகார் உள்ளது. மேற்படி ஆட்சேபனை புகாருக்கு சுரேஷ் தான்

காரணம் என்று எதிரிகள் சுரேசை அடித்து காயப்படுத்தினார்கள். இது சம்பந்தமாக புகார் 2014ல் உள்ளது.

2016 சுதந்திர தினம் அன்று நாகப்பன், ஞானவேல், குமரவேல், இளையவேல், தனசேகர், நவநீதம், அமுலரசி, தீபா ஆகியோர் என் அம்மாவை அடித்துவிட்டார்கள். என் தம்பி மனைவி கர்ப்பிணியாக இருந்தபோதும் அடித்துவிட்டார்கள். அந்த நேரத்தில் என் தம்பி பணியில் இருந்து கேட்டதற்கு என் தம்பியையும் அடித்துவிட்டார்கள்.

அப்போது கத்தியால் தாக்கியதில் 15 தையலுக்கு தலையில் போட்டார்கள். தலையில் ரத்தம் வந்துக்கொண்டு இருக்கும்போதே அடித்தவுடன் என் தம்பி எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். என் தம்பி ரத்தத்துடன் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்தார். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

என் தம்பி ஊர் பொது விஷயத்தில் முன்னால் இருப்பதும், ஊர் தலைவராக அமுலரசி நாகப்பன் இருப்பதால் அவர்களுக்கு பிடிக்காமல் அது சம்பந்தமாகவும் பிரச்சனை ஏற்படும். அதன்பிறகு இந்த வழக்கு சம்பவம் நடந்தது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

போலிசார் என்னை விசாரித்தபோது முதல் விசாரணையில் சொல்லியுள்ள முந்திய பிரச்சனைகளை குறித்து நான் எதுவும் சொல்லவில்லை என்றால் போலிசார் அந்த மாதிரி விசாரிக்கவில்லை. சாட்சி தற்போது முந்திய பிரச்சனை குறித்து போலிசார் விசாரணையில் சொன்னதாக

சாட்சியம் அளிக்கிறார். என் தம்பியின் வழக்கை வலு சேர்க்கவேண்டும் என்பதற்காக காவல்துறையினரிடம் சொல்லாத விவரங்களை நீதிமன்றத்தில் கூடுதலாக சேர்த்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அவசியமே இல்லை.

கொலை நடந்ததை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரி தான். என் தம்பியின் உடம்பில் வெட்டுகாயம், கழுத்தில் அடையாளம் இருந்தது என்ற விவரத்தை போலிசார் என்னை விசாரணை செய்தபோது சொல்லவில்லை என்றால் சரியல்ல. இரவு 1 மணிக்கு போலிசார் என்னை விசாரித்தபோது யார் யார் இருந்தார்கள் என்றால் என் அம்மா, உமேஷ்,விஜயமணி, வடிவேல் மற்றும் என் மனைவி ஆகியோர் இருந்தார்கள். இரவு 1 மணிக்கு விசாரணை செய்தபோது கையொப்பம் வாங்கிக்கொண்டு சென்றார்கள் என்றால் காலையில் வந்து புகார் கொடுக்கும்படி சொன்னார்கள்.

நாகப்பனை எத்தனை மணிக்கு வீட்டில் இருந்து அழைத்துக்கொண்டு சென்றார்கள் என்றால் என் தம்பியை மருத்துவமனைக்கு அழைத்து சென்ற அன்று இரவே 12 மணிக்கு அழைத்துச் சென்றார்கள். போலிசார் விசாரணையில் இரவு 8 மணிக்கு என் அம்மா எனக்கு சண்டையை குறித்து போனில் சொன்ன தகவலை சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

நாகப்பன் மனைவி அமுலரசி ஊராட்சி மன்ற தலைவர் போட்டிக்கு போட்டியிட்டபோது எதிர் அணிக்கு நானும் என் குடும்பத்தினரும் ஆதரவளித்தோம் என்றால் நாகப்பன் மனைவி அமுலரசிக்கு தான் ஆதரவு கொடுத்தோம். நானும் என் தம்பியும் மற்றும் ஜெயபால் ஆகியோர் நாகப்பன் மனைவி அமுலரசிக்கு ஆதரவாக காலில் விழுந்து ஓட்டு

கேட்டோம்.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நான் எங்கு வேலை பார்த்தேன் என்றால் கோவர்த்தனன் பால் நிறுவனத்தில் வேலை பார்த்தேன். நிறுவனத்தின் அலுவலகம் ஆந்திராவில் உள்ளது. நான் அப்போது அந்த நிறுவனத்தின் காஞ்சிபுரம் விற்பனை நிர்வாக அலுவலராக இருந்தேன். போலிசார் விசாரித்தபோது சித்தூரில் வேலை செய்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

என் தம்பிக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் இல்லை. என் தம்பி இறந்துபோனதாக சொல்லப்படும் நாள் அன்று இருசக்கர வாகனத்தில் சென்றபோது அஜாக்கிரதையாக ஓட்டி சென்றோ, எதிரே வந்த வாகனம் மோதியோ, நாய் நரி குறுக்கே வந்ததில் விழுந்து இறந்ததை முன்விரோதம் காரணமாக இவ்வழக்கில் என் தம்பியின் இறப்பை பயன்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. காவல் துறையினர் சொல்லிக்கொடுத்ததின்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>7 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் என்னுடைய சொந்த ஊருக்கு எப்போதும் சென்றது கிடையாது என்றாலும், அதனால் ஊரில் நடப்பது எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. அது எப்படி தெரியாமல் இருக்கும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எத்தனை முறை விசாரணை செய்தார்கள் என்றால் 2,3 முறை விசாரணை செய்தார்கள்.

போலிசார் விசாரணை செய்ததை போலிசார் வாக்குமூலமாக எழுதிக் கொண்டார்களா என்றால் எழுதிக் கொண்டார்கள். போலிசார் எழுதியதை நான்

**படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். போலிசார் விசாரித்தபோது என் தம்பி ஊர் பொது விஷயத்தை முன்னால் இருந்ததாகவும், தலைவியாக அமுலரசி நாகப்பன் இருந்ததாலும் தகராறு இருந்தது என்ற சங்கதியை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.**

**என் தம்பிக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. என் தம்பிக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் இல்லை என்றாலும், என் தம்பி அஜாக்கிரதையாகவும் அதிவேகமாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டுவார் என்றாலும் சரியல்ல.**

**என் தம்பி நடத்துனர் என்பதால் சீருடை உள்ளது என்றால் சரி தான். தொலைதூர பயண பேருந்திற்கு சென்று வருவார் என்றால் சரி தான். அதனால் 2,3 நாட்கள் சுழற்சி பணியை செய்வார் என்றால் சரி தான். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், வழக்கிற்காக புகுத்தப்பட்ட பொய் சாட்சி என்றால் சரியல்ல.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.